**களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2018**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பதவிநிலைக் கல்லூரி

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 <u>நிதிக்கூற்றுக்கள்</u>

### 1.5.1 <u>நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு</u>

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

**1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு / இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம், நடைமுறையல்லா சொத்துக்களின் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 6,730,056 கிரயமான அலுவலக உபகரணங்கள் மற்றும் இரசாயன ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் முழுமையாக தேய்விடப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் அவை பயன்படுத்தப்பட்டவாறு உள்ளன. | அவதானிப்புடன் இணங்குகின்றேன் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் நிதியல்லாத சீராக்கங்களின் கீழ் முன்னைய ஆண்டில் கூடுதலாக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடான ரூபா 1,476,564 கூட்டப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்ததுடன், மீண்டும் நிதி செயற்பாடுகளின் கீழும் அந்த முன்னைய வருடங்களிலான மேலதிக ஒதுக்கங்களாக அப்பெறுமதியே ஏனைய நிதியங்களிலான அதிகரிப்பின் கீழ் கூட்டப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டின் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றிலான அதிகரிப்பு ரூபா 2,953,128 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த மீதி தேறிய சொத்துக்கள் / உரித்துகளிலான மாற்றங்கள் கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகள் இல்லாத காசுப்பாய்ச்சலொன்று 2019 ஆம் ஆண்டின் வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்க வேண்டும் |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் நிலையான சொத்துக்களை கையேற்றல் ரூபா 3,206,627 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணிப்பீடுகளுக்கமைய ஆண்டினுள் நிலையான சொத்துக்களை கையேற்றல் ரூபா 3,483,119 ஆனமையால் ஆண்டிற்கான நிதிய வெளிப்பாய்ச்சல் ரூபா 276,491 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | குறைபாடுகள் இல்லாத காசுப்பாய்ச்சலொன்று 2019 ஆம் ஆண்டின் வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்க வேண்டும் |

**1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட 159 சொத்து உருப்படிகளின் பெறுமதியான ரூபா 581,800 தொகை மீளாய்வாண்டு வரையிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கை**

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| ஆராய்ச்சி மற்றும் பிரசுர இருப்பு | 1,074,187 | 947,867 | 126,320 | வேறுபாடுகளுக்கு காரணங்கள் கண்டுபிடித்து எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | பௌதீக இருப்பு மெய்மை அறிக்கைகளின் மீதிகளுடன் நிதிக்கூற்றுக்களின் மீதி சீராக்கப்பட வேண்டும். |
| நிலையான சொத்துக்கள | 27,691,432 | 23,869,763 | 3,821,669 | | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களின் மீதி சீராக்கப்பட வேண்டும். |

**1.5.5 தொங்கல் கணக்கு**

| விடயம் | தொகை | தொங்கலாக வைக்கப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| தொங்கல் கணக்கு | 20,420 | 2011 ஆம் ஆண்டு முதல் | தொங்கல் பெறுமதியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வேறுபாடு இனங்கண்டு தொங்கல் கணக்கு மீதி அகற்றப்பட வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| விடயம் | தொகை | தொங்கலாக வைக்கப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | | |
| முன்னைய ஆண்டு சீராக்கம் | 3,180,015 | அட்டவணை | எதிர்காலத்தில் குறித்த அட்டவணையை கணக்காய்விற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்விற்காக தேவையான அட்டவணை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 யூலை 18 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்ட ஆராய்ச்சி உதவியாளர் ஒருவருக்கு மாதமொன்றிற்கு ரூபா 30,000 படி மீளாய்வாண்டின் சனவரி முதல் திசெம்பர் வரையிலும் ரூபா 360,000 தொகையான கொடுப்பனவொன்றும் செய்யப்பட்டிருந்த போதிலும் முறையான நியமனமொன்று இல்லாமல் 06 மாத காலத்திற்காக ரூபா 180,000 தொகையான ஆராய்ச்சி மானியமாக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி உதவியாளரின் சேவை 2018 சனவரி முதல் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் நியமனக் கடிதம் 2018 யூலை மாதம் முதல் வழங்கப்பட்டுள்ளது. | கொடுப்பனவிற்காக முறையான அதிகாரமொன்று இல்லாமல் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1979 இன் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவக சட்டவாக்கத்தின் 11(5) ஆம் பிரிவு | சட்டவாக்கத்தின் 13(2)(இ) பந்தியின் பிரகாரம் பீடத்திற்கு அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் களனி பல்கலைக்கழக பாளி கற்கைப் பிரிவின் தலைவர் மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டிலும் ஒரு கூட்டத் தொடரிலும் பங்குபற்றியிருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய உத்தியோகத்தர் மற்றும் பதிவாளர் தெரியப்படுத்தப் பட்டுள்ளனர். | சட்டவாக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 06.05.1 ஆம் பந்தி | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது வரைவு ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வந்தமையால் சமர்ப்பிக்க முடியாமல் போனது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணி சம்பந்தமாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணனித் துணைப்பாகங்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ஈ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் இலக்கம் 2/2014 இன் 04 ஆம் பந்தியின் | | | |
| | (iii) பிரிவு | பதவியணிக்கு ஆராச்சிப் படிகளை செலுத்தும் போது ஆராச்சி ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களினுள் உள்ளக ஆராச்சி அறிக்கைகள் ஆராய்ச்சிக் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன், இறுதி அறிக்கைகளும் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் செயற்படாது கல்விசார் மற்றும் கல்வி சாரா பதவியணியின் 10 பேருக்கு 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,700,598 தொகையான ஆராய்ச்சிப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டின் போது ஆறு மாத ஆராய்ச்சி செயன்முன்னேற்றம் மற்றும் இறுதி அறிக்கை ஆராய்ச்சிக் குழுவிற்கு சமர்ப்பிக்கபட உள்ளது. | சுற்றறக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) பிரிவு | ஆராய்ச்சியின் தன்மை மற்றும் விடய எல்லையை அடிப்படையாக கொண்டு ஆராய்ச்சியொன்றின் கால எல்லை ஆகக்கூடியது 03 வருடங்களாக இருக்க வேண்டிய போதிலும், பேராசிரியர்கள் ஒரே ஆராய்ச்சியினை பல வருடங்களாக முன்வைத்திருந்த சந்தர்ப்பங்கள் மற்றும் ஆராய்ச்சியின் தன்மையை கருத்திற்கொள்ளாது ஆராய்ச்சிக் காலத்தினை நீடிப்பு செய்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | இது தொடர்பாக விரிவுரையாளர்களுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2017 மே 04 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க கூட்டிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | நூலக புத்தகங்கள் மெய்மையாய்வு வருடாந்தம் நடாத்த வேண்டிய போதிலும், நிறுவனத்தினால் இறுதியாக புத்தக மெய்மையாய்வொன்று 2015 ஆம் ஆண்டிலேயே இடம்பெற்றுள்ளது. | 2019 ஆம் ஆண்டிற்கு நூலக மெய்மையாய்வு சபை நியமிக்கப்படபட்டுள்ளது. | நூலக புத்தகங்கள் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். |

### 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேவைப்பாடுகள் இனங்காணப்படாமல் விற்பனைக்காக பத்தகங்கள் அச்சிடப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 947,867 பெறுமதியான 3,234 ஆன புத்தக மீதிகள் காணப்பட்டன. | எதிர்வரும் காலங்களில் புத்தகங்களின் அளவிற்காக பரிந்துரை மற்றும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைப்பாடு இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் புத்தகங்கள் அச்சிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 10,852,049 ஆன மிகையாக இருந்ததுடன் அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,417,412 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,434,637 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு மீண்டெழும் செலவினத்திற்கான மானியம் ரூபா 11,408,000 ஆலும் ஏனைய வருமானம் ரூபா 9,282,218 ஆலும் அதிகரித்தமை மற்றும் தனிப்பட்ட வேதனங்கள் மற்றும் ஏனைய செலவினம் ரூபா 12,728,165 ஆல் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்திற்கு மின் பிறப்பாக்கி இயந்திரமொன்றினை கொள்வனவு செய்வதற்கு பத்திரிகை அறிவித்தலொன்று மேற்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 56,925 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அக் கொள்வனவு இடம்பெறாதிருந்த மையால் விளம்பரத்திற்கான செலவினம் சிக்கனமற்றதாக இருந்தது. | முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது மின் பிறப்பாக்கி இயந்திர மொன்றினை கொள்வனவு செய்வதில் சாதகம் மற்றும் பாதகம் தொடர்பில் நீண்டநேர கலந்துரையாடலின் பின்னர் கொள்வனவு நிறுத்தப்பட்டது. | கொள்வனவு தேவைப்பாடு திட்டவட்டமாக இனங்காணப்பட்டு விளம்பரம் வெளியிடப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்னமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டப்பின் படிப்பு அபேட்சகர் களால் சமர்ப்பிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை பரீட்சிப்பதற்காக உரிய விரிவுரையாளர்களால் அதிகளவு காலம் எடுக்கப்படுவதால் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதமடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான மூன்று வருட காலப்பகுதியினுள் ஒப்படைக்கப்பட்ட 35 ஆராய்ச்சிக் கட்டுரைகளில் 17 சுமார் ஒரு வருட காலமாக பரிசோதகர்களின் வசமிருந்தமை தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டன. | விரிவுரையாளர்கள் கடமைப் பழு உள்ளவர்களாக இருப்பதால் | பெறுபேறுகளை துரிதமாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2005 பெப்ரவரி 16 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 13 வருட காலப்பகுதியினுள் நிறுவகத்தின் 06 விரிவுரையாளர்கள் மற்றும் 71 அறிஞர்களுக்கு வழங்கப்பட்ட 167 புத்தகங்கள் 2019 மார்ச் 20 வரையிலும் மீள கையளிக்கப் பட்டிருக்கவில்லை. | ஊரிய நபர்களுக்கு நினைவூட்டும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | விரிவுரையாளர்கள் பெற்றுக் கொள்ளும் புத்தகங்களை நியாயமான காலப்பகுதிக் குள் மீளப்பெற்றுக் கொள்வதற்காக முறையான நடவடிக்கையொன்று எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்களுக்காக ரூபா 1,500,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 710,457 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக கல்வி மற்றும் நிர்வாக பதவியணியினர் ஊக்குவிக்கப்பட்டுள்ளதாக | ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக கல்வி மற்றும் நிர்வாக பதவியணியினர் ஊக்குவிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நடந்து கொண்டிருக்கும் ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் விரிவுரையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 800,000 தொகையான முற்பணத் தொகையில் ரூபா 407,935 மாத்திரம் செலவிடப்பட்டு ஆண்டின் இறுதியில் எஞ்சிய தொகையான ரூபா 392,065 மீண்டும் தீர்க்கப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானதாகும் | செலவின மதிப்பீடு தொடர்பாக கருத்திற் கொண்டு முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

### 3.4 நிதியங்களின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயர்வேத பாடநெறியின் கீழ் கடந்த 5 வருடங்களினுள் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்த ரூபா 221,452 தொகை மற்றும் மீளாய்வாண்டின் போது ஒதுக்கீடு செய்த ரூபா 32,000 தொகை என்பன உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப் படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர்வரும் காலங்களில் செலவினங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக பாடநெறி வருமானத்தில் ஒதுக்கப்பட்டிருந்து ரூபா 527,911 தொகை மீளாய்வாண்டின் இறுதி திகதியிலும் ரூபா 1,585,350 ஆன மீதி உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாடு கிடைக்காத அத்திவசிய கொள்வனவிற்காக இப்பணம் பயன்படுத்தப்பட உள்ளது. | குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2016 ஆம் ஆண்டின் போது மதகுருமாருக்கான நல்லொழுக்க போதனை நிகழ்ச்சித்திட்டத்திற்காக களுத்துறை போதி நம்பிக்கைப்பொறுப்பு சபையிடமிருந்து ரூபா 250,000 மற்றும் கண்டி தலதா மாளிகையின் நிதியத்திலிருந்து ரூபா 200,000 தொகையுமாக ரூபா 450,000 கூட்டுத்தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2019 பெப்ரவரி 20 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் நடாத்துவதற்குள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இப்பணம் பயன்படுத்தபட உள்ளது | குறித்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நள்ளாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திறனை அதிகரித்தல் (To Promote Efficiency) எனும் இலக்கிற்காக பாடநெறிகளின் தரத்தினை அதிகரித்தல் மற்றும் புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தல், கூடுதலான மாணவர்களை இணைத்துக்கொள்ளல் போன்றவற்றிற்கான பணிகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2019/2020 ஆம் ஆண்டிற்காக இவ்விடயங்களை உள்ளடக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படக் கூடிய வகையில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன், ஒப்பிடும் போது 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் செயற்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டிற்குரியதாக நிறுவகத்தினால் தமது விடயப்பரப்பின் | கருத்து தெரிவித்திருக்கவில்லை | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

கீழ் கொள்ளப்படும் பணிகள் தொடர்பில் இலக்குகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்குகளை அடையும் போது குறித்த பணிகளை மேற்பார்வை செய்வதற்கு தேவையான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறுவனத்தின் திட்டத்தில் உள்ளடக்குதல், குறிகாட்டிகளை தயாரித்தல், தரவுகளை பேணுதல் மற்றும் அடைவுகளை இனங்காணல் இடம் பெற்றிருக்கவில்லை.